## 8.40 பணியமைப்பு பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவு கோலின்படி துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் பேரூராட்சிகள் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை

அரசாணை (நிலை) எண்.199 நாள்: 12.08.1997

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.92, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 22–04–93
2. அரசாணை (நிலை) எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை, நாள் 30–4–97
3. பேரூராட்சிகள் இயக்குநரின் கடிதம் எண்.12452.94.அ6, நாள்23–7–97,

பேரூராட்சிகளில் நியமனம் செய்யப்பட வேண்டிய பல்வேறு வகைப் பணியாளர்களின் எண்ணிக்கை குறித்து முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையில், ஏனைய பணியிடங்களுடன் பேரூராட்சிகளில் துப்புரவு பணியாளர் பணியிடங்களை ஏற்படுத்த கீழ்கண்டவாறு குறித்த அலகு (Norms) வசூலிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | குறித்த அலகு | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | துப்புரவு ஆய்வாளர் | 20,000 மற்றும் அதற்கும் அதிகமான மக்கள் தொகையும் ஆண்டு வருமானமும் 15 இலட்சம் ரூபாயும் கொண்ட பேரூராட்சிகளில் | ஒன்று |
| 2. | துப்புரவு மேஸ்திரி | 15 சிற்றேலர்களின் பணியைக் கவனிக்க | ஒன்று |
| 3. | பெருக்குபவர் | குடியிருப்பு பகுதிகளில் 1 கி.மீ. சாலை தூரத்திற்கும் மற்ற பகுதிகளில் 1.5 கி.மீ. தூரத்திற்கும் | ஒன்று |
| 4. | கழிவுநீர்க்குழி சுத்தம் செய்பவர் (cess pool Cleaner) | 50 கழிநீர் குழிகளை சுத்தம் செய்ய | ஒன்று |
| 5. | மக்கு உரம் தயாரிக்கும் மஸ்தூர்(Comost Mazdoor) | ஆண்டு ஒன்றுக்கு 1000 மெட்ரிக் டன் உரம் தயாரிக்க | ஒன்று |
| 6. | வடிகால் சுத்தம் செய்பவர் (Drainage Cleaner) | 500 மீட்டர் நீ கச்சா வடிகால் அல்லது 1000 மீட்டர் கட்டுமான வடிகால் சுத்தம் செய்ய | ஒன்று |

மேற்படி அரசாணையின்படி புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க அரசின் அனுமதி பெறப்பட வேண்டும். எனினும், புதிதாக பணியிடங்கள் தோற்றுவிக்க தடை இருந்து வருவதால் மேற்படி அரசாணையின்படி புதிதாக பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. எனினும், பெருகிவரும் வேலைப்பளுவை சமாளிக்க பல பேரூராட்சிகளில் தினக்கூலி அடிப்படையில் **(NMR)** பணியாளர்கள் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தங்கள் பேரூராட்சியில் பொது சுகாதாரத்தை கவனிக்க போதுமான துப்புரவுப் பணியாளர்கள் இல்லையென்றும் எனவே பேரூராட்சிகளில் வளர்ந்துவரும் மக்கட்தொகைக்கேற்ப கூடுதலாக துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்யும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்றத் தலைவர்களிடமிருந்து கோரிக்கைகள் அரசிற்கு வந்தவண்ணம் உள்ளன.

2. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நகராட்சிகளில் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை குறித்து திருத்திய அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டு, அந்த திருத்திய அளவுக்கோலின்படி அவ்வரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு நகராட்சிகளில் கூடுதலாக துப்புரவுப் பணியாளர் பணியிடங்களைத் தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று மேலே பத்தி 1ல்

குறிப்பிட்டுள்ள அளவுகோலின்படி பேரூராட்சிகளிலும் துப்புரவு பணியாளர் பணியிடங்களைத் தோற்றுவிக்க தனக்கும் அதிகாரம் வழங்கும்படி பேரூராட்சிகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி பேரூராட்சிகளில் கூடுதலாக துப்புரவுப் பணியாளர் பணியிடங்களைத் தோற்றுவிப்பது குறித்தும் அவற்றை நிரப்புவது குறித்தும் பேரூராட்சிகள் இயக்குநர் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | அரசாணை (நிலை) எண்.92 உரக வளர்ச்சித் துறை, நாள்22–4–93ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி பேரூராட்சிகளில் தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 10,581.00 |
| 2. | தற்போதுள்ள / ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | 6,068.00 |
| 3. | மேற்கொண்டு தேவையான மற்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி தேவைப்படும் கூடுதல் பணியிடங்களின் எண்ணிக்கை | 3,415.00 |
| 4. | தற்போது தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் எண்ணிக்கை (என்.எம்.ஆர்) | 1,615.00 |

ஒவ்வொரு பேரூராட்சியிலும் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி ஏற்படுத்தப்பட வேண்டிய துப்புரவுப் பணியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை, தற்போதுள்ள ஒப்புதலளிக்கப்பட்டுள்ள பணியிடங்கள், தேவைப்படும் கூடுதல் பணியிடங்கள் மற்றும் தற்போது தினக்கூலி அடிப்படையில் **(NMR)** பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை முதலிய விவரங்கள் அடங்கிய பட்டியலை பேரூராட்சிகள் இயக்குநர் அனுப்பியுள்ளார். இப்பட்டியலின்படி ஒரு சில பேருருாட்சிகளில் தற்போதுள்ள ஒப்புதல் அளிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலுக்கும் கூடுதலாகவும்,மேலும் நில பேரூராட்சிகளில் ஒப்புதலளிக்கப்பட்ட துப்புரவுப் பணியாளர் பணியிடங்களையும் என்.எம்.ஆர். பணியாளர்களின் எண்ணிக்கையையும் கூட்டினால் நிர்ணயிக்கப்பட்ட துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கைக்கும் கூடுதலாகவும் உள்ளது. எனினும் பெரும்பாலான பேரூராட்சிகளில் தற்போதுள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலைவிட மிகவும் குறைவாகவே உள்ளது. இதனை கருத்தில் கொண்டு பேரூராட்சிகள் இயக்குநர் கீழ்க்காணும் பரிந்துரைகளை அரசிற்கு செய்துள்ளார்.

(i) அரசாணை (நிலை) எண்.92, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்22–4–93ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி கூடுதலாக தேவைப்படும் 3415 சுகாதாரப் பணியாளர் பணியிடங்களை ஏற்படுத்தலாம்.

(ii) சம்பந்தப்பட்ட பேரூராட்சியின் நிதிநிலைமை மற்றும் தேவையின் அடிப்படையில் அரசு நிர்ணயிக்க அளவு கோல்களுக்குட்பட்டு புதியதாக பேரூராட்சியில் துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்த பேரூராட்சிகள் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கலாம்.

(iii) இவ்வாறு புதிதாக ஏற்படுத்தப்படும் பணியிடங்களில் 31–12–96க்கு முன்னிருந்து பணியாற்றிவரும் தகுதி வாய்ந்த என்.எம்.ஆர். மற்றும் கூடுதல் சுகாதாரப் பணியாளர்களை பக்கத்தில் உள்ள பேரூராட்சிகளில் பணியமர்த்தலாம். இவ்வாறு அவர்களை நியமனம் செய்தது போக கூடுதலாக தேவைப்படும் பணியிடங்களை வேலை வாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று விதிமுறைகளிப்டி பணியாளர்களை நியமனம் செய்யலாம்.

(iv) புதிதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் மாதம் ரூ.900 தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படலாம். இத்தொகுப்பூதியம் ஒவ்வொரு ஆண்டும் 10 கூடுதலாக்கப்படலாம்.

(v) புதியதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்களை முதலில் ஒரு ஆண்டும் காலத்திற்கு மட்டும் நியமனம் செய்யலாம். பின்னர், ஒவ்வொரு ஆண்டும் காலத்திற்கும் அவர்களின் நியமனத்தை புதுப்பித்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்க நியமனம் செய்யப்படலாம். மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் இப்பணியாளர்களின் செயலாக்கத்தை மதிப்பீடு செய்து அவர்களை முறையான ஊதிய ஏற்ற முறையில் நியமனம் செய்யப்பட வேண்டுமா என்பது குறித்து அரசு பரிந்துரை செய்து ஆணையிடலாம்.

4. பேரூராட்சிகள் இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதை ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவு கோலின்படி பேரூராட்சிகளில் கூடுதலாக துப்புரவுப் பணியாளர் பணியிடங்களைத் தோற்றுவிக்குமாறு பேரூராட்சிகள் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(1) பேரூராட்சி பேருந்து நிலையங்களில் மற்றும் அங்காடிகளில் உள்ள கட்டண கழிப்பறைகளை பராமரித்தல், பேருந்து நிலையத்தை சுத்தம் செய்தல் ஆகிய பணிகளுக்கான துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்வதற்குப் பதிலாக இப்பணிகளை பொது ஏலத்தில் வீட்டு குத்தகைதாரரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு பொது ஏலத்தில் விட்டு குத்தகைதாரரிடம் இப்பணிகளை ஒப்படைக்க இயலாத நிலையில் இப்பணிகளுக்கென துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்யலாம்.

(2) நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி பேரூராட்சிகளில் கூடுதலாக துப்புரவு பணியாளர்கள்நியமனம் செய்ய வேண்டுமெனில் அக்கூடுதல் பணியாளர்களுக்கான செலவினத்தை பேரூராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதலளித்து அப்பேரூராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

(3) பேருராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் பேருராட்சிகள் இயக்குநரால் பேரூராட்சியின் நிதி நிலைமையை பரிசீலித்து கூடுதல் பணியிடங்களை தோற்றுவிக்க அனுமதி அளிக்கப்படும்.

(4) நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி புதியதாக தோற்றுவிக்கப்படும் கூடுதல் பணியிடங்களிலும் ஏற்கனவே காலியாக உள்ள ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடங்களிலும் அந்தந்த பேரூராட்சிகளில் தற்போது தினக்கூலி அடிப்படையில் (NMR) 31–12–96க்கு முன்பிருந்து பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களை பணிமூப்பு அடிப்படையில் நியமனம் செய்யப்பட வேண்டும். எந்த ஒரு பேருராட்சியிலாவது நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவு கோலுக்கும் கூடுதலாக தற்போது துப்புரவு பணியாளர் மற்றும் தினக்கூலி துப்புரவுப் பணியாளர்கள் இருந்தால், அவர்கள், கூடுதல் பணியாளர் தேவைப்படும், அருகில் உள்ள வேறு பேருராட்சிகளில் பணியமர்த்தப்பட வேண்டும். இவ்வாறு இவர்களை நியமனம் செய்ததுபோக கூடுதலாகத் தேவைப்படும் பணியிடங்களில் மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று விதிமுறைகளின்படி பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(5) இவ்வாறு புதியதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் மாதம் ரூ.900 என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும். இத்தொகப்பூதியம் ஒவ்வொரு ஆண்டும் 10 சதவிகிதம் கூடுதலாக்கப்படும். (முதலாமாண்டு 900/–, இரண்டாமாண்டு 990/–, மூன்றாமாண்டு 1089/–)

(6) இவ்வாறு புதியதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் முதலில் ஒரு ஆண்டு காலத்திற்கு மட்டும் நியமனம் செய்யப்பட வேண்டும். பின்னர் ஒவ்வொரு ஆண்டு காலத்திற்கும் இந்நியமனத்தை புதுப்பித்து தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு நியமனம் செய்யப்பட வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் இப்பணியாளர்களின் நியமனம் செய்யப்பட வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் இப்பணியாளர்களின் செயலாக்கத்தை மதிப்பீடு செய்து இவர்களை முறையான ஊதிய ஏற்ற முறையில் நியமனம் செய்யப்பட வேண்டுமா என்பது குறித்து அரசு பரிசீலித்து ஆணையிடும்,

5) இந்த அரசாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அரசு அ.சா.க.எண்.64552/ந.நி.ப.மாக.97–1 நாள் 11–89–97ன்படி வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**
அரசு செயலாளர்